உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

பதிப்பு : நாகர்கோவில் 20.08.2026 மலர் 04 இதழ்: 232 வியாழக்கிழமை

Edition : Nagercoil 20.08.2026 Vol : 04 Issue : 232 Page : 4 Rs. 5/-

# அமித்ஷா தலைமையில் நடைபெறும் தென்மண்டல கவுன்சில் குழுவில் விஜய்க்கு முக்கிய பொறுப்பு

மாமல்லபுரத்தில் நடைபெறும் தென்னிந்திய முதல்வர்கள் மாநாட்டுக்கான குழு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் தலைவராக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அறிவிக்கப்பட்டுள்ளார். தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் விஜய் துணைத்தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தென் மண்டல கவுன்சில் கூட்டத்தில் ஆந்திரா, கர்நாடகா,கேரளா, தமிழ்நாடு ,தெலுங்கானா ஆகிய மாநிலங்களின் முதல் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்கிறார்கள்.

மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் ஆண்டுதோறும் தென்மாநில முதல்மந்திரிகள் மாநாடு நடத்தப்படுவது வழக்கம். ஆனால், கடந்த 2022ம் ஆண்டுக்கு பிறகு இந்த மாநாடு நடைபெறவில்லை. இந்தநிலையில், 31வது தென்மாநில முதல்மந்திரிகள் மாநாடு இன்று சென்னையை அடுத்த கோவளத்தில் உள்ள நட்சத்திர ஓட்டலில் தொடங்குகிறது. இந்த மாநாட்டுக்கு மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தலைமை தாங்குகிறார். இதில் தமிழக முதல்அமைச்சர் விஜய், கர்நாடக முதல்மந்திரி டி.கே.சிவக்குமார், கேரளம் முதல்மந்திரி சதீசன், தெலுங்கானா முதல் மந்திரி ரேவந்த் ரெட்டி, ஆந்திர முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு, புதுச்சேரி



முதல்அமைச்சர் ரங்கசாமி ஆகியோர்பங்கேற்க உள்ளனர். மேலும், அந்தந்த மாநில தலைமை செயலாளர்கள், உள்துறை செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளும் கலந்துகொள்கிறார்கள்.

மாநிலங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, பொருளாதார வளர்ச்சி, தொழில் முதலீடுகள், கூட்டுறவை பலப்படுத்துவது, கட்டமைப்பு மேம்பாடு, நீர்வள பகிர்வு, கல்வி, சுகாதாரம், தகவல் தொழில்நுட்பம், பேரிடர்மேலாண்மை, குற்றங்கள் தடுப்பு, எல்லை பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு முக்கிய விவகாரங்கள் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது. தற்போது காவிரி நீர் பங்கீடு விவகாரத்தில் கர்நாடகம் மற்றும் தமிழகம் இடையே முரண்பாடுகள் எழுந்த நிலையில் இந்த கூட்டம் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக மத்திய மந்திரி அமித்ஷா இன்று மாலை 4.50 மணிக்கு டெல்லியில் இருந்து தனி விமானத்தில் சென்னை புறப்படுகிறார். இரவு 7.40 மணிக்கு சென்னை விமான நிலையம் வந்தடைகிறார். விமானநிலையத்தில் உயர் அதிகாரிகள் மற்றும் கட்சியினர் வரவேற்கி றார்கள். பின்னர் அவர், காரில் கோவளம் செல்கிறார். இரவு 9 மணி முதல் 9.30 மணி வரை ஆய்வுக்கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் முதல்அமைச்சர் விஜய் மற்றும் 5 மாநில முதல் மந்திரிகள் கலந்து கொள்கிறார்கள்.



## தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுக ஏலக்கூடம் சீரமைக்கப்படும்

### மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

**நாகர்கோவில், ஆக.20**

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கடலோர கிராம பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று 19.ம் தேதி தேங்காய்பட்டணம் மீன்பிடி துறைமுகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்: தமிழ்நாடு அரசானது மீன்வளத்துறையின் சார்பில் தேங்காப்பட்டணம் மீன்பிடி துறைமுக பகுதிகள் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, வளாகத்தில் உள்ள மீன்பிடித்துறைமுகத்தில் குடிநீர் வசதி, மின்சார வசதி, படகுகள் பாதுகாப்பாக வந்து செல்லும் முகத்துவாரப் பகுதி மற்றும் மீன்களைக் கையாளுவதற்குக் கட்டமைக்கப்பட்டுள்ள மீன் ஏலக்கூடம் ஆகியவற்றின் நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுகாதாரமான முறையில் மீன்களைஏலம்விடுவதற்கும், ஏலக்கூடத்தை எப்போதும் தூய்மையாகப் பராமரிப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து, விசைப்படகு மற்றும் பாரம்பரிய மீன்பிடி தொழில் செய்யும் மீனவப் பிரதிநிதிகளையும், உள்ளூர் தொழிலாளர்களையும் நேரில் சந்தித்து கலந்துரையாடப்பட்டது. மீனவர்கள் தரப்பில் பல்வேறு கோரிக்கைகள் கேட்டறியப்பட்டது. அப்போது மீனவர்கள் ஏலக்கூடத்தினையும், ஏலக்கூடத்தின் அருகில் உள்ள சிறிய அளவிலான கழிவுநீர் ஓடையினையும் சீரமைத்து தருமாறும், கழிவறையினை மற்றொரு இடத்திற்கு மாற்றி தருமாறும், மருத்துவ வசதிகள் ஏற்படுத்திடுமாறும் கோரிக்கை வைத்தார்கள். அவர்களின் கோரிக்கைகளுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள மீன்வளத்துறை துணை இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் துறைமுக முகத்துவாரத்தில் தொடர்ந்து ஏற்படும் மணல் திட்டுக்களை அகற்றி, படகுகள் தடையின்றி வந்து செல்ல நிரந்தர தூர்வாரும் நடவடிக்கை எடுக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் கோபிநாத், மீன்வளத்துறை செயற்பொறியாளர் பிரேமலதா, உதவி இயக்குநர் மீன்வளத்துறை விர்ஜில் கிராஸ், கிள்ளியூர் வட்டாட்சியர் ராஜசேகர், உதவி பொறியாளர்கள், மீனவ பிரதிநிதிகள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## குமரியில் கடல் நீர் புகுந்த பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் நேரில் ஆய்வு

**நாகர்கோவில், ஆக.20**

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல்சீற்றம் காரணமாக கணபதிபுரம் முதல்நிலை பேரூராட்சிக்குட்பட்ட கடலோர கிராமங்களில் வீடுகளுக்குள் அலை காரணமாக கடல்நீர் புகுந்தது. இந்த நிலையில் அழிக்கால், ஆயிரக்கால், பொழிக்கரை, கடியப்பட்டணம், கோடிமுனை உள்ளிட்ட கடற்கரை பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் நேற்று நேரில் ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:



அழிக்கால் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான அலைதடுப்புச் சுவர் அமைப்பது குறித்துத் விரிவான அறிக்கைகள் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளனது. இதுகுறித்து விரைவில் நல்ல முடிவு எட்டப்படும். கடியப்பட்டணம் கடற்கரை பகுதியில் கடல்சீற்றம் ஏற்படுவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் கோடிமுனை கடலோர பகுதியில் உள்ள மீன்பிடித்துறைமுகத்தினை நேரில் சென்று பார்வையிட்டு, மீனவர்களிடம் குறிப்பிட்ட நாள்களுக்கு கடலுக்குள் சென்று மீன்பிடிப்பதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

கடல்சீற்றம் அதிகமாக உள்ள காலகட்டத்தில் மீனவர்கள் மீன்பிடிப்பதையம், சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் கடலில் குளிப்பதையும் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வில் நீர்வளத்துறை செயற்பொறியாளர் வசந்தி, அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் ஆறுமுகம், உதவி பொறியாளர்கள், பங்கு அருட்பணியாளர்கள், மீனவ பிரதிநிதிகள், துறை அலு வலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

### குமரியில் கடல் சீற்றம்:

## கடலோர மீனவ மக்கள் பாதுகாப்பாக இருக்க கலெக்டர் அறிவுறுத்தல்

**நாகர்கோவில், ஆக.20**

கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் பிரதாப் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: குமரி கடற்கரை மற்றும் கரையோரப் பகுதிகளில், குறிப்பாக தாழ்வான பகுதிகளில் அவ்வப்போது அலைகள் சீற்றத்துடன் எழும்பி கடல் நீர் கரையை நோக்கி வேகமாகப் புகும் நிலை ஏற்படக்கூடும் என்பதால் எச்சரிக்கையுடன் இருக்குமாறு மீனவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கடல் சீற்றம் மற்றும் உயர் அலைகள் எழும் அபாயத்தைக் குறிக்கும் கள்ளக்கடல் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் கடலுக்கு அருகில் செல்வதைத் தவிர்க்க வேண்டும். ஆபத்தான கடற்கரைப் பகுதிகளில் உள்ள நுழைவாயில்கள் மூடப்பட்டு காவல்துறை பாதுகாப்பு தீவிரப்படுத்தப்படுகிறது. சிறிய படகுகளை கரையோரப் பகுதிகளில் இயக்கக்கூடாது. படகுகள் ஒன்றோடொன்று மோதுவ தையும் சேதமடைவதையும் தவிர்க்கும் வகையில் போதிய இடைவெளியில் பாதுகாப்பாக நிறுத்தப்பட வேண்டும்.

கடற்கரை மற்றும் கரையோரப் பகுதிகளில் படகு இயக்கம் நிறுத்தப்பட வேண்டும். கடலில் திடீரென பலத்த காற்று வீசுவதோடு கடலோரப்பகுதிகள் கொந்தளிப்புடன் காணப்பட வாய்ப்புள்ளது. எனவே கன்னியாகுமரி முதல் நீரோடி வரையிலான பகுதிகளில் வசிக்கும் மீனவர்களும், அனைத்து கடலோரப்பகுதிகளில் வசிக்கும் மக்களும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் மீனவர்கள் கடற்கரைப் பகுதிக்கு செல்வதையும், கடலில் குளிப்பதையும் முற்றிலும் தவிர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கன்னியாகுமரியில் கடல் சீற்றம்:

## படகு சேவைகள் நாள் முழுவதும் ரத்து

**கன்னியாகுமரி, ஆக.20**

பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். அவ்வாறு வரும் சுற்றுலா தலமான முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்வார்கள். பின்னர்கடலில்அமைந்துள்ள விவேகானந்தர் நினைவு மண்டபம் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை ஆகியவற்றை படகில் சென்று பார்த்துவிட்டுதிரும்புவது வழக்கம்.

இதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தினமும் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடைவேளையின்றி படகுகளை இயக்கி வருகிறது. நேற்று



வழக்கம் போல் காலை 8 மணிக்கு தொடங்கவேண்டிய படகு சேவை கடல் சீற்றம் அதிகமாக காணப்பட்டது. இதனால் படகு சேவை நாள் முழுவதும் ரத்து செய்யப்பட்டது. காத்திருந்த சுற்றுலா பயணிகள் விவேகானந்தர் நினைவு மண்டபம் மற்றும் திருவள்ளுவர் சிலையை பார்க்க முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

மேலும் கடல் சீற்றம் காரணமாக முக்கடல் சங்கமம் சங்கிலி துறையில் பக்தர்கள் புனித நீராடவும் கால் நனைக்கவும் தடை விதிக்கப்பட்டது. தடைகள் அமைத்து கடலில் இறங்காதவாறு போலீசார், கடலோர பாதுகாப்பு குழும போலீசார் மற்றும் சுற்றுலா பாதுகாவலர்கள் தீவிரமான பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.



தேசிய கைத்தறி தினமான டெல்லியில் நடைபெற்ற 12வது தேசிய கைத்தறி தின விழாவில் "Marketing of Handloom Products" என்ற பிரிவின் கீழ் திருப்பூர் மாவட்டம், சி.எச்.31.கோவில் வழி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் தேசிய விருது வழங்கப்பட்டதை தொடர்ந்து, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்துறை அமைச்சர் எம்.விஜய்பாலாஜி அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார்கள். உடன் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறை, செயலாளர் டி.என் வெங்கடேஷ், கைத்தறி துறை இயக்குநர் பி.உமாமகேஸ்வரி, ஆகியோர் உள்ளனர்.




மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா அவர்கள் தலைமையில் நேற்று(19.08.2026) "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம், தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்க கூட்டரங்கில் மதுரை தெற்கு வட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய குடிநீர், சுகாதாரம் மற்றும் சாலைப் பணிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும், தமிழ்நாடு அரசின் சேவைகள் உரிய பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்வது குறித்தும் அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

## சென்னையில் டெல்லி பெண்ணிடம் வழிப்பறி: கார் ஓட்டுநர் கைது

டெல்லியைச் சேர்ந்த 26 வயது இளம் பெண் ஒருவர், சுற்றுலாவுக்காக 15 நாட்களுக்கு முன்னர் சென்னை வந்து தங்கினார். கடந்த ஆக.17ம் தேதி அதிகாலை நுங்கம்பாக்கத்தில் உள்ள ஓட்டலில் இருந்து தனியார் வாடகை வாகன செயலி மூலம் காரை முன்பதிவு செய்து அரும்பாக்கம் நோக்கி சென்றார். அரும்பாக்கம் செல்ல வேண்டிய கார், மதுரவாயல் மேம்பாலம் அருகே ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிக்குச் சென்றதும் ஓட்டுநர் காரை நிறுத்தி உள்ளார்.

பின்னர் அந்த பெண்ணை கத்தி முனையில் மிரட்டி, அவரது பர்சில் இருந்த பணத்தை பறித்துள்ளார். இதற்கு அந்த பெண் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதையடுத்து, அந்த ஓட்டுநர் அப்பெண்ணிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதுடன், வழிப்பறி செய்த பணத்துடன், பெண்ணை அங்கேயே இறக்கிவிட்டு தப்பியுள்ளார்.

இதையடுத்து, பாதிக்கப்பட்ட பெண் தனது நண்பரை செல்போனில் தொடர்பு கொண்டு, அவரது உதவியுடன் தான் தங்கியிருந்த இடத்துக்கு சென்றுள்ளனர். பின்னர், இது தொடர்பாக வானகரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்படி, போலீஸார் வழக்குப் பதிந்து விசாரித்தனர்.

முதல்கட்டமாக வாடகை வாகன செயலி மற்றும் சம்பவ இடம் மற்றும் அதை சுற்றியுள்ள சிசிடிவி காட்சிகள் மூலம் டெல்லி பெண்ணிடம் பணத்தை பறித்து, பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டது பீர்க்கன்கரணையைச் சேர்ந்த கோபிநாத் (21) என்பது தெரிந்தது. உடனடியாக தலைமறைவாக இருந்த கோபிநாத்தை கைது செய்த போலீஸார், அவரது காரையும் பறிமுதல் செய்துள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் அறிவுறுத்தலின்படி இன்று சுகுமார் நகரில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் மாநகராட்சி சார்பாக திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2026 தொடர்பாக குப்பைகளை பிரித்து கொடுப்பது, குப்பைகளை பிரித்துக் கொடுப்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் டெங்கு காய்ச்சல் பரவலை கட்டுப்படுத்துவது குறித்தும் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# திருவள்ளூர் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் அஸ்வின் குமார் செய்தியாளர்களை தரம் பிரித்து நடத்துவதாக குற்றச்சாட்டு



திருவள்ளூர் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலராக இருக்கும் அஸ்வின் குமார் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளூர் மாவட்டத்தில் ஏ பி ஆர் ஓ வாக பணியாற்றி வந்திருக்கிறார்

இதனால் திருவள்ளூர் மாவட்டத்தில் அனைத்து அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளை தெரிந்து வைத்துள்ளதால் தன்னை பெரிய நபராக கருதி வருகிறார்

இதனால் திருவள்ளூர் மாவட்டத்தில் செய்தியாளர்களாக பணிபுரியும் சிறு பத்திரிக்கையாளர்கள் தரம் பிரித்து நடத்துகிறார் அரசு வழங்கும் சலுகைகளான பஸ் பாஸ் அங்கீகார அட்டைகளை குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டும் பெற்று தருகிறார்

அதேபோன்று மக்கள் தொடர்பு அலுவலர் செய்தி குரூப்பில் குறிப்பிட்ட பத்திரிகையாளர்களை மட்டும் இனணத்துள்ளார் இதனை பலமுறை கேட்டும் பதில் அளிக்காததால் பத்திரிகையாளர்கள் அனைவரும் திருவள்ளூர் பிரஸ் கிளப் சார்பாக மாவட்ட ஆட்சியரை சந்தித்து நேரில் மக்கள் தொடர்பு அலுவலர் அஸ்வின் குமார் மீது புகார் அளித்தனர் இந்த புகாரின் அடிப்படையில் மாவட்ட ஆட்சியர் ச. கவிதா அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக கூறினர்..

# கன்னியாகுமரி மாவட்டத்தில் வன விலங்கு வேட்டையாடியதாக 2 பேர் கைது

**நாகர்கோவில், ஆக.20**

கன்னியாகுமரி மாவட்ட வனஅலுவலர் மற்றும் வன உயிரின காப்பாளர் அ. அன்பு அவர்களின் உத்தரவின்படி, உதவி வனப் பாதுகாவலர்கள் நிதின் மற்றும் ஸ்ரீவல்சன் ஆகியோரின் வழிகாட்டுதலின் படி, பூதப்பாண்டி வனச்சரக அலுவலர் ந.அன்பழகன் தலைமையில் வனத்துறையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற ரோந்து பணியின் போது, தெற்குமலை காப்புக்காடு அருகே கோட்டக்கரை காப்பு நிலத்தில் அட்டவணை Iல் அறியப்படும் கடமான் எனும் மிளாவை, அவுட்டுக்காய் என்ற நாட்டு வெடிகுண்டு மூலம் வேட்டையாடப்பட்டு அதன் தலை, கால்கள், குடல் போன்ற உடற்பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட வன அலுவலரின் உத்தரவுப்படி, குற்றம் செய்த நபர்களைதீவிரமாக தேடி வந்தனர்.



தொடர்ந்து ஆதாரங்களின் அடிப்படையில் காட்டுப் புதூர் பகுதியை சேர்ந்த ஆல்வின் (30), ரமேஷ் (42) ஆகிய இரு நபர்கள் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து நகர் கோவில் வன வழக்குகள் சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைக்கப்பட்டனர்.

வனத்துறை அதிகாரிகள், காட்டு உயிரினங்களை பாதுகாக்கும் நடவடிக்கைகள் மற்றும் காட்டு தீயை தடுக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

வனக் குற்றங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என வனத்து றையினர் எச்சரித்துள்ளனர்.

# தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

**தஞ்சாவூர் ஆகஸ்ட் 20**

தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் ஆகஸ்ட் 21 ஆம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட கலெக்டர் ரேவதி தெரிவித்திருப்பது

தஞ்சாவூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டு மையத்தின் சார்பாக வேலை தேடும் இளைஞர்களுக்காக மாதந்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமைகளில் சிறு அளவில் வேலை வாய்ப்பு முகாம்கள் அலுவலக வளாகத்திலேயே காலை 10 மணி அளவில் நடத்தப் படுகிறது.

இதன்படி ஆகஸ்டு 21ஆம் தேதி காலை 10 மணி அளவில் நடைபெறும் முகாமில் ,தஞ்சாவூரில் உள்ள முன்னணி தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு 100க்கும் அதிகமான காலியிடங்க




ளுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்ய உள்ளனர். தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த வேலை தேடும் இளைஞர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முகாமில் 8 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்தோர் டிப்ளமோ, ஐடிஐ, பட்டதாரிகள்o ஆகியவைகலந்துகொள்ளலாம் .மேலும் மேலே அழைக்கும் நிறுவனங்கள் தங்களுக்கு தேவையான ஆட்களை முகாமில் கலந்து கொண்டு நேரடியாக தேர்வு செய்து கொள்ளலாம். இந்த முகாமில் கலந்து கொள்பவர்கள் www.tnprivatejobs.tn. gov. inஎன்ற இணையதளத்தில் பதிவு செய்வது அவசியம்.

வேலை நாடுநர்கள் தங்களது சுய விவர அறிக்கை கல்வி சான்றுகள் ஆதார் அட்டை இதர சான்றிதழ்க ளின் நகல்களுடன் கலந்து கொண்டு பணி வாய்ப்பை பெறலாம் மேலும் விவரங்களுக்கு 04362 237037என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்

# சித்தேரி மலை கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார மையத்தில் ஆட்சியர் ஆய்வு

**தருமபுரி ஆகஸ்ட் 20**

தருமபுரி மாவட்டம் அரூர் வட்டம் சித்தேரி மலை கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார மையத்தினை மாவட்ட ஆட்சியர் சரவணன் ஆய்வு மேற்கொண்டார் .புற நோயாளிகள் பிரிவு, நோயாளிகள் பதிவு செய்யும் இடம், நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் மருந்துகள் , நோயாளிகள் பதிவு செய்யும் பிரிவில் பதிவு விவரம், பதிவுகளில் மேற்கொள்ளும் பணிகள் குறித்து மருத்துவ பணியாளர்களிடம் ஆட்சியர் கேட்டுஅறிந்தார். மேலும் தீவிர சிகிச்சை பிரிவு, அவசர காலப்பிரிவு, இயல் முறை சிகிச்சை பிரிவு ,எலும்பு முறிவு சிகிச்சைகள் பிரிவு, பொது



மருத்துவம் பெண்கள், விஷ முறிவு சிகிச்சைகள் மற்றும் விஷ முறிவு சிகிச்சைகளுக்கான மருந்துகள் இருப்பு உள்ளிட்ட பிரிவுகளை ஆய்வு செய்து நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் பற்றி மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் உடனிருந்தனர்.

# த.மா. கா சார்பில் மூப்பனார் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை

**ஈரோடு ஆக 20**

தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் மறைந்த முன்னாள் தலைவர் மூப்பனார் பிறந்த நாள் விழா நேற்று ஈரோடு மத்திய மாவட்ட த மா கா சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இதையொட்டி ஈரோடு செங்கோடம் பாளையத்தில் உள்ள மாற்று திற



னாளி பள்ளி குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. இதையடுத்து ஈரோட்டில் உள்ள மாவட்ட கட்சி அலுவலகத்தில் கொடி ஏற்றப்பட்டு மூப்பனார் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதேபோல் பவானி அந்தியூர் பகுதியிலும் மூப்பனார் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

மத்திய மாவட்ட தலைவர் விஜயகுமார் தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சியில் முன்னாள் எம் எல் ஏ விடியல் சேகர் கலந்து கொண்டு முப்பனார் படத்துக்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்கினார். நலத் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

முன்னாள் கவுன்சிலர் கொற்றவேல் மற்றும் நிர்வாகிகள் பலர் இதில் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் பெரிய குப்பம் டி.இ.எல்.சி. மைதானத்தில் கிறிஸ்தவர்களின் நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்ட த்துக்கு பூந்தமல்லி சட்ட மன்ற உறுப்பினர் குட்டி என்கிற பிரகாசம் அவர்களுக்கு அழைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் மக்களின் அழைப்பை ஏற்று கிறிஸ்துவ நற்செய்தி கூட்டத்திற்கு வருகை தந்ததால் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட சுமார் 2000க்கும் மேற்பட்டோர் கரங்களைத் தட்டி மகிழ்ச்சியில் நிறைந்தனர். மற்றும் அவர் பேசுகையில் கிறிஸ்தவர்களுக்கு கிறிஸ்துவ போதகர்களுக்கும் எப்பொழுதும் இந்த ஆட்சி உறுதுணையாக இருக்கும் என மக்களுக்கு வாழ்த்து தெரிவித்து சென்றார்.




கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், எஸ்பிபி (SBP) திருமண மண்டபத்தில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், கள ஆய்வு மேற்கொண்ட அனைத்து துறை அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .த.மஞ்சுளா, ஓசூர் சார் ஆட்சியர் .ஆக்ரிதி சேத்தி , திட்ட இயக்குநர்கள் .உமா மகேஸ்வரி (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) .ச.சுசீலாராணி (மகளிர் திட்டம்), கூடுதல் காவல் கண்காணிப்பாளர் .வேலுமணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

### சிவகங்கை அருகே

# பிரவலூரில் கல்வட்டம் மற்றும் ஈமச் சின்னங்கள் கண்டுபிடிப்பு

**ஆகஸ்ட் 20**

சிவகங்கை மாவட்டம், ஒக்கூர் அருகில் உள்ள பிரவலூர் கிராமத்தில் பெருங்கற்கால ஈமச் சின்னங்கள் மற்றும் கல்வட்டம் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கிராமத்தைச் சேர்ந்த அழகப்பாஅரசுக்கலைக் கல்லூரியின் முன்னாள் மாணவரும் பிரவலூர் கிராமத்தைச் சேர்ந்த சரவணன், அஜய் மற்றும் அவரது நண்பர்கள் மதிச் செல்வம், செந்தூர், பாலசு ப்பிரமணியன், மணி ஆகியோர் அளித்த தகவலின் பேரில் அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் வரலாற்றுத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் வேலாயுதராஜா கள ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது,

பிரவலூர் கிராமத்தின் வடக்குப்பகுதியில், கடம்பன் குடி கண்மாய்க்கு தெற்குப் பகுதியில் பரந்துவிரிந்த ஒரு மேட்டுப்பகுதியும் அதன் அருகில் வறண்ட நிலையில் ஒரு ஓடையும் காணப்படுகிறது. அங்கு மேற்பரப்பில் ஏராளமான கல்வட்டங்களும், ஈமத்தாழிகளும் காணப்படுகின்றன. மண் அரிப்பு காரணமாக பெரும்பாலான ஈமத்தாழிகள் வெளியில் நன்கு தெரிகின்றன. மேலும் அதிகமான கல்வட்டங்களும், இரண்டு குத்துக்கற்களும் காணப்படுகின்றன. மேலும் ஆங்காங்கே உடைந்த கருப்பு–சிவப்பு நிறப் பானை ஓடுகளும், இரும்புக் கசடுகளும், குவார்ட்ஸ் வகைக் கற்களும் காணப்படுகின்றன. இவை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பெருங்கற்கால ஈமச் சின்னங்களாக இருக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. இறந்தவர்களைப் புதைத்த இடத்திலோ அல்லது அவரது எலும்புகளைப் புதைத்த இடத்திலோ பெரிய கற்களைக் கொண்டு எடுக்கப்பட்ட ஈமச்சின்னங்



களை, பெருங்கல் சின்னங்கள் என கூறுகிறார்கள். ஏனெனில், பெருங்கற்காலத்தில் மனித எலும்புச் சிதைவுகள் மற்றும் கல்லறைப் பொருட்கள் பெரிய மண் பானைகளில் வைக்கப்பட்டு மூடியால் மூடப்படும். சில நேரங்களில் அதன் மேல் கல் மற்றும் கல் குவியல் அமைக்கப்பட்டது.

கல் திட்டை என்ற டால்மென், குழி அடக்கம், பானை அடக்கம் எனப்படும் முதுமக்கள் தாழி, சர்கோபகஸ் என்ற ஈமப்பேழை, பாறை வெட்டுக் கல்லறை, குடைக்கல் மற்றும் தொப்பிக்கல், மென்ஹிர் என்ற குத்துக்கல், ஆந்த்ரோமார்பிக் எனப்படும் மனித உருவக் கற்சிலை, கல்வட்டம் மற்றும் கற்குவை எனப் பல வழிகளில் இறந்தவர்களின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்ட ஈமச்சின்னங்கள் உள்ளன. இப்படித் தொன்மையான பெருங்கற்படைச் சின்னங்கள் தமிழகத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவை உள்ளன. இவற்றில் நூற்றுக்கணக்கானவை அகழாய்வு செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தின் ஆதிச்சநல்லூர், சானூர், கொடுமணல், தாண்டிக்குடி, பொருந்தல், மயிலாடும்பாறை போன்றவை அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

பெருங்கற்கால நினைவுச்சின்னங்கள் தென்னிந்திய இரும்புக்காலப் பண்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாகக் கருதப்படுகின்றன. இங்கும் இரும்பை உருக்கிக் கருவிகள் செய்யப்பட்டிருக்கலாம். ஏனெனில் பிரவலூரில் உள்ள இப்பகுதியில் இரும்புக் கசடுகள் கிடைத்திருப்பது குறிப்பிட த்தக்கது. இப்பகுதிக்கு அருகிலேயே பெருங்கற்கால மக்களின் வாழ்விடப் பகுதியும் அமைந்திருக்க வாய்ப்புள்ளது.

இவை குறித்து சிவகங்கை மாவட்டத் தொல்லியல் துறைக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளதால், இப்பகுதியில் விரிவான ஆய்வு செய்வதன் மூலம் மேலும் அதிக தகவல்கள் தெரிய வாய்ப்புள்ளது என அவர் தெரிவித்தார்.



தமிழக வெற்றிக் கழகம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் சார்பில் நாகர்கோவிலில் தியாகி குஞ்சன் நாடாரின் 52வது நினைவு நாள் கடைப்பிடிக்கப்பட்டது . கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைய பாடுபட்ட நேசமணியின் வலதுகரமாக செயல்பட்டவர் வழக்கறிஞர் குஞ்சன்நாடார் அவர்கள் அவரது நினைவுதினத்தையொட்டி இன்று நாகர்கோவில் வெட்டூர்ணிமடம் சந்திப்பிலுள்ள அவரது சிலைக்கு தமிழக வெற்றிக் கழகம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் சார்பில் மாவட்ட செயலாளர் மாதவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் மாவட்ட இணை செயலாளர் பிரேம்குமார், தொழிலதிபர் பால்ராஜ், செயற்குழு உறுப்பினர்கள் நிகேஷ், சக்தி குமரன், மாநகர இணை செயலாளர் முத்துப்பாண்டி உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

# பெரிய குப்பத்தில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 3,789 போதை மாத்திரைகள் பறிமுதல்

## இரண்டு பேரை கைது செய்து சிறையில் அடைப்பு

திருவள்ளூர் மாவட்டத்தில்கஞ்சா, போதைப் பொருட்கள், போதை மாத்திரைகள், போதை ஊசிகள் புழக்கம் அதிக அளவில் காணப்படுகிறது. இது குறித்து காவல் துறைக்கு தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. இதனால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி திருவள்ளூர் நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பெரிய குப்பம் மேம்பாலம் அருகே உள்ள திரையரங்கம் அருகே நின்று இருந்த இரண்டு பேரை பிடித்து சோதனை செய்




தனர். அப்போது அவர்களிடம் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட மாத்திரைகள் சுமார் 3789 இருப்பதை கண்டு பிடித்தனர்.

இதனை அடுத்து மேற்கொண்ட தொடர் விசாரணையில் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம் திரு த்தணியைச் சேர்ந்த ஷாம் சுந்தர் (28) மற்றும் அப்ரித் (18) என்பது தெரிய வந்தது. இதனை அடுத்து அரசால் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளை பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு விற்பனைக்காக வைத்திருந்ததும் தெரியவந்ததையடுத்து அவர்களிடமிருந்து போதை மாத்திரைகளை பறிமுதல் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி இருவரையும் சிறையில் அடைத்தனர்.

# கோவையில் ஆலோசனைக் கூட்டம்

**கோவை ஆக:20**

வருகின்ற செப்டம்பர் 5ஆம் தேதி ஐயா வ உ சிதம்பரம் பிள்ளை பிறந்த நாள் விழா ஆலோசனை கூட்டம் வடவள்ளி திருவாளர்கள் வேளாளர் பிள்ளை அறக்கட்டளையின் சார்பிலும் மற்றும் சிறப்பு கூட்டத்தில் அகில இந்திய வேளாளர் வெள்ளாளர் பேரவை நிறுவனத் தலைவர் கே ஆர் சிவதேசிகன் வேளாளர் பிள்ளை மற்றும் கோவை மாவட்ட ஒருங்கிணைந்த வேளாளர் வெள்ளாளர் பேரிக்கத்தின் அங்க வகித்துள்ள



வடவள்ளி வேளாளர் பிள்ளை நல சங்கத்தின் சார்பிலும் நிர்வாக குழுவும் பொது குழுவின் சார்பிலும் நடைபெற்றது.

இவரது பிறந்தநாளை பூங்காவில் சீரும் சிறப்புமாக நடைபெறுவது எனவும் அன்று நடைபெறுகின்ற அனைத்து அமைப்புகளையும் அரவணைத்து அங்கு வருபவர்களுக்கு அனைவருக்கும் அன்னதானம் வழங்குவது என முடிவு எடுக்கப்பட்ட சிறப்பு தீர்மானம் நிறைவேற்றி முடிவெடுக்கப்பட்டது.

மேலும் வடவள்ளி பஸ் நிலையம் அருகில் ஐயா அவர்களுடைய திருஉருவப் படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவது குறித்தும் இந்த ஆலோசனை அனைத்து அமைப்புகளுடன் சேர்ந்து கீழ்கண்ட நாங்களும் கலந்து கொள்வது என முடிவு செய்து அறக்கட்டளை நிர்வாகிகளும் சங்க நிர்வாகிகளுமான தலைவர் V.லோகநாதன் பிள்ளை செயலாளர் S.கதிரவன் பிள்ளை பொருளாளர் B.சிவக்குமார் பிள்ளை, துணைத் தலைவர் வி வெங்கடசாமி பிள்ளை, துணை செயலாளர் வி நடராஜ் பிள்ளை மேலும் கௌரவ தலைவர் ஜெகநாதன் பிள்ளை கௌரவ ஆலோசகர் ஜி வெள்ளிங்கிரி பிள்ளை மற்றும் மகளிர் அணி நிர்வாகிகளும் இளைஞர்களும், பொது மக்களும்கலந்துகொண்டு கலந்து கொண்டு 1000 பேருக்கு அன்னதானம் வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், நடைபெற்ற உங்களைத்தேடி உங்கள் ஊரில் முகாமில் நில வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் பொது மக்கள் இணையதளம் வாயிலாக பதிவு செய்யப்படும் மனுக்களின் நிலைகுறித்து மாவட்ட ஆட்சியர் ச.கந்தசாமி நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

# சித்தேரி மலை கிராமத்தில் அரசு உண்டு உறைவிடப் பள்ளியில் மாணவர்களுக்கு தரமான உணவு ஆட்சியர் நேரில் ஆய்வு

**தருமபுரி ஆகஸ்ட் 20**

தருமபுரி மாவட்டம் அரூர் தாலுகா சித்தேரி மலை கிராமத்தில் உள்ள அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சியர் சரவணன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது மாணவ, மாணவிகளிடம் கற்றல்திறன் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து ஆட்சியர் மாணவ, மாணவியரிடம் கலந்துரையாடினார். நன்றாக படித்து உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். பள்ளியில் வகுப்பறை கட்டிடங்கள், குடிநீர், மின்சாரம் ,கழிவறை மாணவ, மாணவிகளின் தங்கும் இடம், விடுதியில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் மாணவ, மாணவி



களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள் குறித்து ஆட்சியர் ஆய்வு மேற்கொண்டார். பள்ளி வளாகத்தை சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்துக்கொள்ள வேண்டும். மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்படும் உணவு தரமாக இருக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது அரூர் உதவி ஆட்சியர் செம்மலை, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், சித்தேரி அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கோமதி, விடுதி காப்பாளர்கள் சத்யா, மஞ்சுநாதன் மற்றும் அரசு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.



அதிமுக பொதுச்செயலாளர் முன்னாள் முதலமைச்சர் புரட்சித் தமிழர் எடப்பாடி கே. பழனிச்சாமியால் அறிவிக்கப்பட்ட தருமபுரி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் கே. ஆர் .சந்திரன், தருமபுரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் டாக்டர் ஆர். அசோகனை மாவட்ட தலைமை அலுவலகத்தில் சந்தித்து சால்வை அணிவித்து வாழ்த்துக்களை பெற்றார். ஒன்றிய கழகச்செயலாளர் எஸ். சி. பழனி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# சிவகிரி வட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் நலத்திட்ட ஆய்வுகள் மற்றும் உதவிகள் வழங்கல்

தென்காசி மாவட்டத்தில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின்கீழ் சிவகிரி வட்டத்தில் மாவட்ட ஆட்சியர் ரஞ்ஜீத் சிங் பல்வேறு கள ஆய்வுகளை மேற்கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, நாரணபுரம் அங்கன்வாடி மையத்திற்கு நேரில் சென்று அதன் செயல்பாடுகள் மற்றும் பராமரிப்பு குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.



வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியம், நாரணபுரம் ஊராட்சியில் புதிதாகக் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக் கூடத்தின் கட்டுமானப் பணிகளை மாவட்ட ஆட்சியர்நேரில் பார்வையிட்டதை

மேலும் மேட்டுப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் சார்பில் இருப்பு இராமநாதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வில் 20.15 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கடன்களுக்கான காசோலைகளைப் பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

## காப்புக்காடு

# அரசு நுகர் பொருள் வாணிப கழகம் குடோனில் மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

**புதுக்கடை, ஆக.20**

புதுக்கடை அருகே காப்புக்காடு அரசு குடோனில் மாவட்டம் முழுவதும் உள்ள குடோன் சுமை தூக்கும் தொழிலாளர்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு நுகர் பொருள் வாணிப கழக குடோன் காப்புக்காட்டில் இயங்கி வருகிறது. இங்கிருந்து மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு ரேஷன் கடை உணவு பொருட்கள் லாரிகளில் கொண்டு செல்லப்படுகிறது. இந்த நிலையில் மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் தமிழகம் முழுவதும் வருகை பதிவேட்டில் பெயர் சேர்க்காத தொழிலாளர்களை வருகை பதிவேட்டில் பெயர் சேர்க்க வேண்டும், இரண்டு வருடங்களாக கூலி உயர்த்தி வழங்கபடால் இருக்கும் தொழிலாளர்கள் கூலியை உயர்த்தி வழங்க வேண்டும், தொழிலாளர்கள் சங்க தேர்தல் நடத்தப்பட வேண்டும், பத்து ஆண்டுகள் பணிமுடித்த தொழிலாளர்களுக்கு பச்சை அட்டை வழங்க வேண்டும்.

மேலும் வடமாநில தொழிலாளர்களை மூட்டை தூக்க பயன்படுத்தி வருவதால் உள்ளூர் மூட்டை தூக்கும் தொழிற்சாலைகள் பாதிக்



கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் உட்பட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டம் நடத்தினர்.

குமரி மாவட்டம் முழுவதும் கோணம் உள்ள அரசு குடோன்களில் தங்கள் பணிகளை புறக்கணித்து வேலை நிறுத்த போராட்டம் நடத்தி வருகின்றனர் இதனால் கோணம், ஆரல்வாய்மொழி உட்பட்ட மாவட்டம் முழுவதும் ரேஷன் கடைகளுக்கு குடோன்களில் அரிசி, பருப்பு,சீனி , கோதுமை உட்பட்ட பொருட்கள் கொண்டு செல்லும் பணிகள் பாதிக்கப்பட்டு உள்ளது. காப்புகாடு குடோனில் மாவட்ட மூடை தூக்கும் தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் மணிகண்டன் தலைமையில் மாவட்டம் முழுவதும் உள்ள 120மேற்பட்ட மூட்டை தூக்கும் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களது கோரிக்கைகளைஅரசுநிறைவேற்றும் வரை போராட்டம் தொடர போவதாகவும், தமிழகஅரசுநுகர்பொருள் வாணிப கழகத்தை வடமாநில நுகர் பொருள் வாணிப கழகமாக மாற்றும் வகையில் வடமாநில தொழிலாளர்கள் அதிகரித்து வருவதாக குற்றச்சாட்டுகளை எழுப்பியுள்ளனர்.

# மரம் ஏறும் தொழிலாளி மகளுக்கு மருத்துவ படிப்பில் இடம்






**மானாமதுரை, ஆக:20**

மானாமதுரையில் மரம் ஏறும் தொழிலாளி மகளுக்கு அரசுப் பள்ளிக்கான 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் மருத்துவப் படிப்பில் இடம் கிடைத்தது. சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே கல்குறிச்சியைச் சேர்ந்தவர் மலைச்சாமி. இவர் அந்தமானில் தென்னை மரம் ஏறும் தொழில் செய்கிறார். இவரது மனைவி சரஸ்வதி.

இவர்களது மகள் ரக்சிதா ஒன்று முதல் 10ம் வகுப்பு வரை சொந்த ஊரில் உள்ள அரசு தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் படித்தார்.

மானாமதுரை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பிளஸ் 2 முடித்தார். நீட் தேர்வில் 506 மதிப் பெண்கள் பெற்ற அவருக்கு அரசுப் பள்ளிக்கான 7.5 சதவீத இடஒதுக்கீட்டில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் எம்பிபிஎஸ் படிக்க இடம் கிடைத்துள்ளது. அவரை பள்ளி ஆசிரியர்கள், கிராம மக்கள் பாராட்டினர்.

# சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் நடத்தப்பட்ட புகைப்பட கண்காட்சி



**சேலம் ஆக 20**

சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய பனைமடல் ஊராட்சி மன்றத் திடலில் தமிழக முதலமைச்சர் பொது மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைசிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் பார்த்து பயன்பெறும் வகையில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க புகைப்பட கண்காட்சி சேலம் மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றிய பனைமடல் ஊராட்சி மன்றதிடலில் சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க புகைப்பட கண்காட்சி நடத்தப்பட்டது.

# தஞ்சாவூர் மாவட்டத்தில் சீமை கருவேல மரங்கள் அகற்றும் பணிகள் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி (ஓய்வு )செல்வம் ஆய்வு செய்தார்

**தஞ்சாவூர் ஆகஸ்ட்20**

தஞ்சாவூர் மாவட்டத்தில் நீர் நிலை களில் வளர்ந்துள்ள சீமை கருவேலை மரங்கள் அகற்றும் பணிகள் குறித்து மாவட்ட கலெக்டர் ரேவதி முன்னிலையில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி (ஓய்வு) செல்வம் ஆய்வு செய்தார்

தமிழகத்தில் நீர் நிலைகளை பாதுகாப்பதற்காக வளர்ந்துள்ள சீமை கருவேல மரங்களை முற்றிலுமாக அகற்றுமாறு சென்னை உயர்நீதிமன்றம் பல்வேறு உத்தரவுகளை பிறப்பித்தது

இதன்படி நகராட்சி, நீர் வளத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி



துறை மாவட்ட நிர்வாகம் சார்பில் ஒரத்தநாடு, பட்டுக்கோட் டை ,திருவோணம், வட்டங்களு க்குள் பட்ட வெட்டுவாக் கோட்டை, வெட்டிக்காடுநர்சரி, நடுவூர், ஒரத்தநாடு புறவழிச்சாலை, ஒரத்தநாடு அண்ணா நகர் ,சோழன் கரை, கிளாமாங்காடு, சூரப்பள்ளம் மகிழங் கோட்டை போன்ற பல்வேறு இடங்களில் நீர் நிலைகளில் சீமை கருவேலை மரங்கள் அகற்றும் பணிகளை சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி (ஓய்வு )செல்வம் ஆய்வு செய்தார்.

அப்போது மாவட்ட கலெக்டர் ரேவதி உடன் இருந்தார்.

# கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவரின் அலுவலகத்தை மக்கள் பயன்பாட்டிற்கு திறக்க வேண்டும் என சமூக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் சந்திரமோகன் கோரிக்கை

**கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 20**

கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவரின் அலுவலகத்தை கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு சில பிரச்சனையால் நகர மன்ற அலுவலகம் சீல் வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிய நகர் மன்ற தலைவராக சாவித்திரிகடலரசுமூர்த்தி தேர்வு செய்யப்பட்டார். கிருஷ்ணகிரி நகராட்சியில் உள்ள நகர மன்ற தலைவரின் அலுவலகத்தை மீண்டும் திறக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் ஆணையிட்டும், இன்று வரை அலுவலகம் பூட்டி கிடக்கிறது.

அதனால் உடனடியாக அலுவலகத்தை திறந்து பொதுமக்கள் தங்கள் குறைகளை நிவர்த்தி செய்ய அனைத்து வசதிகளும் செய்து தர வேண்டும்



என மாவட்ட ஆட்சியர், நகராட்சி கமிஷனர், உள்ளிட்ட அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. அதே போன்று நகராட்சியில் எந்த ஒரு பணியும் நடைபெறுவதில்லை மூன்று நகராட்சி ஆய்வாளர்கள் உள்ளார்கள். இவர்கள் அடிக்கடி மாதக்கணக்கில் லீவு போட்டுவிட்டு சென்று விடுவதாகவும் கூறப்படுகிறது. இதனால் நகரப் பணிகள் அனைத்தும் முடங்கி கிடக்கிறது. உயர்நீதிமன்ற ஆணையை செயல்படுத்தாத நகராட்சி கமிஷனர் (பொறுப்பு)க்கு தனது கண்டனத்தை தெரிவித்துக் கொண்டார்.

# இராமேஸ்வரம், தனுஷ்கோடி பகுதிக்கு செல்ல தற்காலிகமாக தடை

வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தனுஷ்கோடி பகுதியில் பலத்த காற்றும், கடுமையான கடல் சீற்றமும் நிலவுவதால், சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு கருதி ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் தனுஷ்கோடி மற்றும் அரிச்சல்முனை பகுதிக்குச் செல்ல தற்காலிகமாக தடை விதித்துள்ளது. இன்றைய நிலவரம் மற்றும் இதுகுறித்த முழுமையான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: அடைப்புக்கான முக்கிய காரணங்கள் வழக்கத்திற்கு மாறான கடல் சீற்றம்: கடலில் 5 முதல் 6 அடி உயரத்திற்கு ராட்சத அலைகள் எழும்பி, கடற்கரை பாறைகளில் மோதி தேசிய நெடுஞ்சாலை வரை கடல்நீர் வருகிறது. பலத்த சூறாவளிக் காற்று: மணிக்கு 40 முதல் 60 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசுவதால் மணல் புயல் ஏற்பட்டு, வாகனங்கள் செல்வதிலும், மக்கள் நடப்பதிலும் சிரமம் ஏற்பட்டுள்ளது. புயல் எச்சரிக்கை கூண்டு: கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக பாம்பன் துறைமுகத்தில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

தற்காலிக தடை மட்டுமே: இந்த தடை இத்தனை நாட்களுக்குத்தான் என்று குறிப்பிட்ட கால அளவு நிர்ணயிக்க ப்படவில்லை. வானிலை மாறத்தைப் பொறுத்தது: கடல் சீற்றம் தணிந்து, காற்றின் வேகம் குறைந்து இயல்பு நிலை திரும்பியவுடன், மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறையின் முறையான அறிவிப்புக்குப் பின் மீண்டும் சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள். நீங்கள் ராமேஸ்வரம் அல்லது தனுஷ்கோடிக்கு பயணிக்கத் திட்டமி ட்டிருந்தால், உள்ளூர் மாவட்ட நிர்வாகத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பு அல்லது வானிலை நிலவரத்தை சரிபார்த்துவிட்டு உங்கள் பயணத்தைத் தொடர அறிவுறுத்தப்படுகிறது.

குமரி மாவட்ட ஆட்சியருக்கு தவறான அறிக்கை

# நெல் கொள்முதல் செய்யாதால் தனியார் மில்களுக்கு நெல்லை விற்பனை செய்யும் விவசாயிகள்

நாகர்கோவில், ஆக.20

குமரி மாவட்டத்தில் கடந்தவருடம் வேளாண்மைத் துறை அதிகாரிகளின் தவறான நடவடிக்கைகளால் அரசு கொள்முதல் நிலையங்களில் முழுமையாக நெல்லை கொள்முதல் செய்யாமலும், உரிய சேமிப்பு கிடங்குகள் இல்லாததால் மழையில் நெல் நனைந்து முளைத்தும் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.



பின்னர், மாவட்ட பாசனத்துறை நிர்வாகிகளின் தொடர் போராட்டங்களினால் நெல்லை அரசு கொள்முதல் செய்ய வேண்டிய நிலைமையும், இவ்விஷயத்தில் மாவட்ட நிர்வாகத்திற்கு கெட்டப்பெயரும் ஏற்பட்டது.

அதனால், இந்த வருடமும் நெல் கொள்முதலில் பிரச்சனை ஏற்படக்கூடாது என்ற எண்ணத்திலும், மழைக்காலத்தில் கன்னிப்பூ அறுவடை நடைபெறும்போது மழையில் நெல் நனையக்கூடாது என்பதாலும் பாசனத்துறை நிர்வாகிகளினுடைய தொடர் முயற்சியால் கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்க வசதியாக நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினுடைய குடோன்கள் உள்ளிட்ட சுமார் 10இடங்கள் பற்றிய விபரம் கண்டறியப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் பிரதாப் நெல் கொள்முதலில் மிகுந்த ஆர்வம் காட்டி கூடுதலாக பல்வேறு இடங்களை வருவாய்துறை மூலம் தேர்வு செய்து சுமார் 25 நிலையங்களை கன்னிப்பூ அறுவடைக்கு தயார் செய்யுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

ஆனால், வேளாண்மைத்துறை அதிகாரிகள் ஏற்கனவே பாசனத்துறை நிர்வாகிகள் சுட்டிக்காட்டிய குடோன்கள் உட்பட புதிய இடங்களை தேர்வு செய்வதற்கு எதிரான கருத்துக்களை 'விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் கூறி ஆட்சியரின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டனர்.

கடந்த ஒருவாரகாலமாக பறக்கை ஏலாவிலுள்ள நெல் அறுவடை செய்யப்பட்டு, கிட்டத்தட்ட பாதி அறுவடை முடிவடைந்துவிட்டது.

ஆனால், வேளாண்மைத்துறை அதிகாரிகள் திட்டமிட்டு நெல் அறுவடை நடைபெற்று வரும் விஷயத்தை மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு செல்லாமல் மறைத்ததுடன், இன்றுவரை பறக்கை நெல் கொள்முதல் நிலையம் மூலம் ஒரு கிலோ நெல் கூட கொள்முதல் செய்யவில்லை என்ற நிலையை உருவாக்கி விட்டனர்.

இதற்கிடையில், நேற்று முன்தினம் தினம் பெய்த மழையில் பெருமளவு அறுவடையான நெல் வயல்களிலேயே நனைந்து சேதமடைந்தது. இதனால், அச்சமடைந்த விவசாயிகள் தங்கள் நெல்லை நேரடியாக தனியார் மில்களுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

மேலும், "அரசு கொள்முதல் நிலையம் மூலம் நெல்லை கொள்முதல் செய்யுமா.?...இல்லையா..?.." என்ற சந்தேகத்தையும் வெளிப்படுத்தினர்.

இது பற்றிய தகவல் அறிந்த பாசனத்துறை நிர்வாகிகள் சேர்மன். வின்ஸ் ஆன்றோ தலைமையில் விவசாயிகள் அப்பகுதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். எனவே உரிய நடவடிக்கை எடுக்குமாறு பாசனத்துறை நிர்வாகிகள் மாவட்ட ஆட்சியரை கேட்டுக் கொண்டுள்ளனர்.

திருப்பத்தூர் மற்றும் கந்திலி ஒன்றியத்திற்கு உட்பட்ட

# பேராம்பட்டு, விஷமங்கலம் ஊராட்சிகளில் 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' மாவட்ட ஆட்சித் தலைவர் கு.ரவிகுமார் ஆய்வு செய்தார்

திருப்பத்தூர்:ஆக:20

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் மற்றும் கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட விஷமங்கலம் மற்றும் பேராம்பட்டு ஊராட்சிகளில் உங்களைத் தேடி உங்கள்ஊரில்திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார், இன்று பல்வேறு அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் சேவை மையங்களில் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதன்படி, கந்திலி ஒன்றியம், விஷமங்கலம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலகத்தின் செயல்பாடுகள் மற்றும்பராமரிக்கப்பட்டு வரும் இருப்பு பதிவேடு, தீர்மானப் பதிவேடு. ரொக்க பதிவேடு, வீட்டு வரி கேட்பு அறிவிப்பு பதிவேடு, வீட்டு வரி பற்றுச் சீட்டு பதிவேடு. தொழில் வரி ரசீது புத்தகம், ரொக்க பதிவேடு உள்ளிட்ட பதிவேடுகளை ஆய்வு மேற்கொண்டு,பதிவேடுகளை முறையாக பராமரிக்கவும், பொதுமக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் சேவைகள் தாமதமின்றி வழங்கப்படுவதை உறுதி செய்யவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து, விஷமங்கலம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் நியாய விலைக் கடையில், பொதுமக்களுக்கு வழங்கப்படும் அத்தியாவசியப் பொருட்களின் இருப்பு விவரங்கள், பொருட்களின் தரம் மற்றும் மின்னணு விற்பனை முனையக் கருவியின் செயல்பாடு குறித்து ஆய்வு செய்தார்.

அதே பகுதியில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மின் தொடர்பான கோரிக்கைகள் மற்றும் குறைகள் மீது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

தொடர்ந்து, விஷமங்கலம் ஊர்புற நூலகத்தில் ஆய்வு மேற்கொண்டு, நூலகத்தின் செயல்பாடுகள், பராமரிப்பு, நூல்கள் இருப்பு மற்றும் வாசகர்களுக்கு வழங்கப்படும் அடிப்படை வசதிகள் குறித்து கேட்டறிந்து, பழைய புத்தகங்களை மாற்றி புதிய புத்தகங்களின் இருப்பை அதிகரித்து. வாசகர்களின் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு நூலகத்தை மேம்படுத்திட அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, விஷமங்கலம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகள்,



வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகள் குறித்து கேட்டறிந்தார்.

அதே பகுதியில் செயல்பட்டு வரும் முதல்வர் மருந்தகத்தை மாவட்ட ஆட்சியர்அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, மருந்தகத்தின் செயல்பாடுகள், மருந்துகளின் இருப்பு மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருந்துகள் மற்றும் சேவைகள் குறித்தும், வெளி மருந்தகத்தில் மற்றும் முதல்வர் மருந்தகத்தில் விற்பனை செய்யப்படும் மருந்துகளின் இடையேயான விலை வேறுபாடு (Rate Difference) குறித்தும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் கேட்டறிந்தார்.

அதனைத்தொடர்ந்து விஷமங்கலம் கிராம நிர்வாக அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு, அலுவலகத்தின் செயல்பாடுகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் அபதிவேடு அடங்கல் பதிவேடு உள்ளிட்ட பதிவேடுகளை ஆய்வு செய்தார்.

மேலும், விஷமங்கலம் ஊராட்சியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, குழந்தைகளுக்கு வழங்கப்படும் ஊட்டச்சத்து உணவு, குழந்தைகளின் வருகைப் பதிவேடு, மையத்தின் சுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்தார். மேலும் சம்பந்தப்பட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# போதைப்பொருள் ஒழிப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவது தொடர்பாக உயர்கல்வி அலுவலர்களுடன் நடந்த ஒருங்கிணைப்பு கூட்டம்

சேலம் ஆக 20

போதை பொருள் ஒழிப்பு குறித்து மாணவ மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாக அரசு மற்றும் தனியார் உயர் கல்வி அலுவலர்கள் உடனான ஒருங்கிணைப்பு கூட்டம் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் நடைபெற்றது.

போதைப் பொருட்களின் நடமாட்டத்தையும் பயன்பாட்டையும் முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழ்நாடு அரசால் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம் போதை பொருள் ஒழிப்பு குறித்து மாணவ மாணவியர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது தொடர்பாக அரசு, அரசு உதவி பெறும் மற்றும் தனியார் கலை அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், செவிலியர் கல்லூரிகள், கால்நடை அறிவியல் கல்லூரிகள் மற்றும் இதர உயர் கல்வித்துறை நிறுவன பொறுப்பாளர்கள் மற்றும் மருத்துவத்துறை சமூக நலத்துறை காவல்துறை ஆகிய துறை அலுவலர்களுடனான ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாணவர் பாதுகாப்பு கல்லூரி மற்றும் விடுதி கண்காணிப்பு, போதை பொருள் தடுப்பு,மாணவர்சேர்க்கை கட்டண சலுகைகள் மற்றும் மாணவர் நலன் தொடர்பான பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டது. அதன்படி சேலம் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் மாணவர்களின் பாதுகாப்பு, ஒழுக்கம் மற்றும் நலனை உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு கல்லூரியிலும் கண்காணிப்பு குழு அமைத்து



மாணவர்களின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணிப்பதுடன் மாணவர்களிடையே ஏற்படும் சிறு பிரச்சனைகள் பெரிய மோதல்களாக மாறாமல் ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. கல்லூரி வளாகத்திற்கு வெளியே மாணவர்கள் இடையே ஏற்படும் பிரச்சனைகள் குறு மோதல்கள் அல்லது சட்டம்ஒழுங்குபாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் குறித்து தகவல்கள் கிடைத்தால் அவை தொடர்பாக உடனடியாக காவல்துறைக்கு தகவல் தெரிவித்து தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட வேண்டும் என கல்லூரி முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் வெளியே மாணவர்களின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

கல்லூரி விடுதிகளில் தங்கி உள்ள மாணவர்களின் பாதுகாப்பிற்கும் ஒழுக்கத்திற்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும். அதேபோன்று கல்லூரி வளாகங்கள் மற்றும் விடுதிகளில் போதைப் பொருட்களின் பயன்பாடு விற்பனை அல்லது பரிமாற்றம் நடைபெறுவதாக சந்தேகம் ஏற்பட்டால் அது குறித்த தகவல்களை உடனடியாக காவல்துறைக்கு தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்கள் போதை பொருள் பயன்பாட்டில் சிக்காமல் இருப்பதற்காக கல்லூரிகளில் தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும். எச்ஐவி தொற்று குறித்து மாணவர்களுக்கு அறிவியல் அடிப்படையிலான விழிப்புணர்வு வழங்கிடவும், சரியான மருத்துவ தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் கல்லூரிகளில் தொடர்ந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் எனவும் அறிவித்தப்பட்டது. குறிப்பாக கட்டண சலுகை மற்றும் அரசு வழங்கும் பல்வேறு நிதி உதவி திட்டங்களின் மூலம் பயன்படுத்த தகுதி உள்ள மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு உரிய வழிகாட்டுதலை வழங்கி காலியாக உள்ள இடங்களில் சேர்க்கை நடைபெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பொருளாதார காரணங்களால் உயர் கல்வியை தொடர முடியாத மாணவர்களுக்கு அரசு வழங்கும் கட்டண சலுகைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து தகவலை எடுத்துரைத்து அவர்கள் கல்வியை தொடர தேவையான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் பாதுகாப்பு, உயர்கல்வி சேர்க்கை, கல்வி தொடர்ச்சி மற்றும் மாணவர்களின் நலன் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைந்து மாணவர்களுக்கு பாதுகாப்பான ஒழுக்கமான மற்றும் மாணவர் நலன் சார்ந்த உயர்கல்வி குழுவை உருவாக்க அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். இவ்வாறு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் கூறினார்.

சுதந்திர போராட்ட தியாகி சத்தியமூர்த்தியின் 139வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# மதுரை சிம்மக்கலில் அமைந்துள்ள அவரது சிலைக்கு தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்

மதுரை ஆகஸ்ட்: 20

பின்னர் மாற்றுக்கட்சியில் இருந்து காங்கிரஸ் கட்சியில் இணைந்தவர்களுக்கு லஞ்சம் தவிர் நெஞ்சம் நிமிர் என்ற துண்டுகளை அணிவித்து வரவேற்றார்.

இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநில தலைவர் மாணிக்தாகூர் 60 ஆண்டுகாலத்திற்கு பின் கதர்சட்ட போட்ட காங்கிரஸ் அமைச்சர் மானிய கோரிக்கை சட்டமன்றத்தில் நடைபெறவதற்கு வாழ்த்துக்கள்; தமிழ்நாடு சுற்றுலாத்து றையை மேம்படுத்துவார் என நம்புகிறேன் இந்த வாய்ப்பை வழங்கி முதலமைச்சர் விஜய்க்கு நன்றி.

தமிழக முதலமைச்சர் விஜய் அமைச்சர்கள் வருங்கால பிரதமர் என பேசிவருவது குறித்த கேள்விக்கு :

தொண்டர்கள் வரும் போது என்னையும் கூட தான் பிரதமர், மத்திய அமைச்சர் ஆக வேண்டும் என கோஷமிட்டார்கள் அதை சீரியசாக எடுக்க வேண்டியதில்லை

ராகுல்காந்தி தான் எதிர் கட்சிகளின் முகம், தமிழகத்தில் இந்த ஆட்சி அமைய முதல் ஆதரவு தந்தது காங்கிரஸ் கட்சி தான் தொண்டர்களின் கோஷங்களுக்கு பதில்சொலல ஆரம்பித்தால் பதில் சொல்லிகொண்டே இருக்கலாம்; தவெக அமைச்சர்களயேநான்தொண்டர்களாக தான் நினைக்கிறேன்.

எம்எல்ஏக்களுக்கு கார் அறிவிப்பு குறித்த கேள்விக்கு ?

ஊழல் செய்யாத, லஞ்சம் இல்லாத சட்டமன்ற உறுப்பினர் வேண்டுமென்றால் அவர்களுக்கு தேவையானவற்றை செய்ய வேண்டும்என்பதுதான்சரியானது.

இல்லையெனில் மறுபடி கட்டிங் போட்டால் பழைய மாடல் மீண்டும் ரிப்பீட் ஆகிவிடும் புதிய தொடக்கத்திற்கு அதற்குரிய வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றார்.

தமிழகத்தில் பூரண மது விலக்கு சாத்தியமா? என்ற கேள்விக்கு ?

பூரண மதுவிலக்கு என்பது காங்கிரசின் லட்சிய கனவு, ஆனால் யதார்த்தம், காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் கூட பூரண மதுவிலக்கு அமல்படுத்தவில்லை; இந்த அரசு கள்ளசாராயம் விற்பனையை அனுமதிக்க கூடாது, போலி சரக்கு விற்க கூடாது, அமைச்சரின் ஆதரவோடு நிழல் உலகம் நடக்ககூடாது என்றார்

கர்நாடக முதலமைச்சர் சிவக்குமார் கர்நாடக விவகாரத்தில் தமிழ்நாடு தலையிடக்கூடாது என கூறியது தொடர்பான கேள்விக்கு ஓபிஎஸ் சொன்னது தொடர்பான கேள்வி அப்படி பதில் அளித்துள்ளார்.



தமிழ்நாடு அரசின் எந்த நிலையிலும் கர்நாடக அரசு, அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது.

தமிழர்களை சுட்டுகொன்றது வன்மையாக கண்டிக்கதக்கது; அதை செய்த வனத்துறை அதிகாரிகளை டிஸ்மிஸ் செய்ய வேண்டும், கிரிமினல் வழக்கு தொடர வேண்டும் உயிரிழந்த குடும்பத்திற்கு கர்நாடக அரசு கூடுதல் நிதி அளிக்க வேண்டும்.

பன்னீர்செல்வம் சொன்னது குறித்த கேள்விக்கு தான் டிகே சிவகுமார் பதிலளித்தார். கர்நாடக அரசுக்கு அவர்கள் முடிவை அவர்கள் எடுப்பார்கள் அதில் தலையிடக்கூடாது. தமிழ் நாடு அரசு முடிவை தமிழ் நாடு முடிவெடிக்கும். மேகதாது அணைக்கட்டுவதற்கான முயற்சிகள் தொடர்பான கேள்விக்கு ?

மேகதாதுவில் ஒரு செங்கலை வைக்க தமிழக காங்கிரஸ் விடமாட்டோம்; மோடி அரசு இதற்கு உதவி செய்யக்கூடாது, அதிமுகவும், பாமகவும் துரோகம் செய்ய கூடாது , மோடி நினைக்கவில்லை என்றால் மேகதாது அணை நிச்சயம் வராது

கர்நாடக அரசு தண்ணீர் திறக்க வேண்டும் தண்ணீரை திறக்காத கர்நாடக அரசை கண்டிக்கிறோம், தண்ணீர் திறக்க எதிர்ப்பு தெரிவிக்கும் பாஜக முன்னாள் முதலமைச்சர் பொம்மையை கண்டிக்கிறோம், தமிழகபாஜக இதனைகண்டிக்கவில்லை என்றார்.

கிருஷ்ணகிரியில்

# கடந்த ஓராண்டுக்கு முன்பு 1 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பிட்டில் கட்டப்பட்டு தினசரி காய்கறி சந்தையானது பயன்பாட்டிற்கு வராததால் தினசரி காய்கறி வியாபாரிகள் அதிருப்தி.

## உடனடியாக பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என கோரிக்கை

கிருஷ்ணகிரி ஆகஸ்ட் 20

கிருஷ்ணகிரி புதுப்பேட்டை பகுதியில் நகராட்சி பேறறிஞர் அண்ணா காய்கறி சந்தை கடந்த பல ஆண்டுகளாக செயல்பட்டு வந்தது. இதில் கட்டிடங்கள் சேதமடைந்ததால் நகராட்சி சார்பில் அன்மையில் ரூபாய் 1 கோடியே 50 லட்சம் மதிப்பீட்டில் அதே இடத்தில் புதிதாக 50 உள்புற கடைகள் மற்றும் 20 வெளிப்புற கடைகள் என மொத்தம் 70 கடைகள் கட்டப்பட்டு கடந்தாண்டு நகர்ப்புற உள்ளாட்சி துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்.

ஆனால் திறக்கப்பட்டு ஓராண்டு ஆகியும் இது வரை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு காய்கறி மார்க்கெட் திறக்க ப்படாமல் பூட்டி கிடக்கிறது. இதனால்காய்கறிவியாபாரிகள் சாலை ஓரங்களில் கடைகளை வைத்து விற்பனை செய்து வருகின்றனர். மழை மற்றும் வெயில் காலங்களில் காய்கறிகள் அதிக அளவில் அழுகி சேதமடைவதால் பெரும் இழப்பு ஏற்படுவதாக வியாபாரிகள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர்.

மேலும் கடந்த ஓராண்டுக்கு முன்பு திறக்கப்பட்ட கடைகள் இன்னும் பயன்பாட்டிற்கு வரவில்லை, இதற்கிடையே கடைகளை ஏலம் விட்டதில் ஏலத்தொகை அதிகம் இருந்ததால் யாரும் கடைகள் எடுக்க முன்வரவில்லை. மாவட்ட நிர்வாகம் மற்றும் நகராட்சி கமிஷனரிடம் பலமுறை மனு அளித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என கூறப்படுகிறது. இதனால் எங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு, பெரும் நஷ்டத்தை சந்திப்பதாகவும், விரைவில் மீண்டும் ஏலம் விட்டு வியாபாரிகளின் நலனை கருத்தில் கொண்டு குறைந்த வாடகையில் கடைகளை திறந்து பயன்பாட்டிற்கு விட வேண்டும் என காய்கறி வியாபாரிகள் கோரிக்கை விடுத்தனர்.



# ஸ்ரீரங்கம் கோயிலுக்கு வரும் பக்தர்களின் செல்போன்களை பாதுகாக்க பெட்டகங்கள் தயார்

திருச்சி, ஆகஸ்ட்: 20

ஸ்ரீரங்கம் கோயிலுக்குள் வரும் பக்தர்களின் செல்போன்களை பாதுகாக்க 3 கோபுர வாசல்களிலும் சிறப்பு கவுன்ட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இங்கு 3 ஆயிரம் பெட்டகங்களில் அதிகபட்சமாக 15 ஆயிரம் செல்போன்கள் வரை வைத்து பாதுகாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முக்கிய கோயில்களில் வரும் செப்.1ம் தேதி முதல் செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்படும் என இந்து சமய அறநிலையத் துறை அறிவித்துள்ளது. கோயில்களின் புனிதத் தன்மையைப் பேணவும், செல்போன் மூலம் புகைப்படம் மற்றும் ரீல்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் செல்போன்களை பாதுகாப்பதற்காக 3 கோபுர வாசல்களில் சிறப்பு கவுன்ட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து கோயில் நிர்வாகத்தினர் கூறும்போது, ''செப்.1ம் தேதி முதல் ஸ்ரீரங்கம் கோயிலுக்குள் செல்போன்கள் அனுமதிக்கப்படாது. இதற்காக, ஸ்ரீரங்கம் தெற்கு கோபுர வாசல், வடக்கு வாசல், கிழக்கு வாசல் என 3 இடங்களில் சிறப்பு கவுன்ட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதில், தெற்கு கோபுர வாசல் பகுதியில் காலணிகள் பாதுகாக்குமிடம் அருகில் உள்ள கவுன்ட்டரில், வங்கி லாக்கர் போன்று 2 ஆயிரம் பெட்டகங்கள் உள்ளன. இதில், ஒரே குழுவாக வந்தால் ஒரு பெட்டகத்துக்கு 5 செல்போன்கள் வரைவைத்து கொள்ளலாம்.

இதேபோல, வடக்கு, கிழக்கு வாசல்களில் தலா 500 பெட்டகங்கள் கொண்ட செல்போன் வைப்பறைகள் தயார் நிலையில் உள்ளன. மொத்தம் 3,000 பெட்டகங்களில் ஒரே நேரத்தில் அதிகபட்சம் 15 ஆயிரம் செல்போன்கள் வரை வைக்க முடியும். இதற்காக ஒரு செல்போனுக்கு ரூ.5 கட்டணம் வசூலிக்கப்படும்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.